# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2074/46 - 2018 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2018.06.08

*2074/46 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கரணவாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் இல. ஜே/351 இல் கரணவாய் எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2017.07.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட சுவட்டு வரைபட இல. வைஏ/கேஆர்வீ/2017/83 இல் குறிப்பிடப்பட்ட துண்டு ‘அ’ மற்றும் ‘ஆ’ எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஏறத்தாழ 0.1871 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு ‘அ’- ஆனைப்பந்தி - விஸ்தீரணம் : 0.0868 ஹெக்டயார்**

வடக்கு: பொதுக் கிணறு, எதிர்வீரசிங்கம் மரியம்மா மற்றும் சிலர் உரிமைகோரும் ஆனைப்பந்தி மற்றும் வீதி (வீ.அ.அ.); கிழக்கு : சுமதி கரன் மற்றும் சிலர் உரிமை கோரும் வண்ணாந்தோட்டம்; தெற்கு : சுமதி கரன் மற்றும் சிலர் உரிமை கோரும் வண்ணாந்தோட்டம், பொதுப் பாதை, வாய்க்கால் பாதை மற்றும் பொதுக் கிணறு; மேற்கு: பொதுப் பாதை, வாய்க்கால் பாதை மற்றும், பொதுக் கிணறு, எதிர்வீரசிங்கம் மரியம்மா மற்றும் சிலர் உரிமை கோரும் ஆனைப்பந்தி மற்றும் வீதி (வீ.அ.அ.).

**02. துண்டு ‘ஆ’- ஆனைப்பந்தி - விஸ்தீரணம் : 0.1003 ஹெக்டயார்**

வடக்கு: சலீது அந்தோனி இராசநாயகம், செல்வரட்ணம் கனகமணி மற்றும் எதிர்வீரசிங்கம் மரியம்மா உரிமை கோரும் ஆனைப்பந்தி, பொதுப் பாதை, வாய்க்கால் பாதை மற்றும் பொதுக் கிணறு; கிழக்கு : பொதுக் கிணறு, பொதுப் பாதை, வாய்க்கால் பாதை மற்றும் சுமதி கரன் மற்றும் தங்கமணி செல்வரட்ணம் உரிமை கோரும் வண்ணாந்தோட்டம்; தெற்கு : தங்கமணி செல்வரட்ணம் உரிமை கோரும் வண்ணாந்தோட்டம் மற்றும் கயல்விழி ஆறுமுகத்தினால் உரிமை கோரும் ஆனைப்பந்தி; மேற்கு: கயல்விழி ஆறுமுகம், சலீது அந்தோனி இராசநாயகம், செல்வரட்ணம் கனகமணி மற்றும் எதிர்வீரசிங்கம் மரியம்மா உரிமை கோரும் ஆனைப்பந்தி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல.: 4-3/4/2017/எல்ஓ/144.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
காணிச் செயலகம்,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2018, மே 09.

6-937